தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 056/ந/2023
நாள் 27.03.2023

திரு.S.சுரேஷ்,
ஆற்காடு,
இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
ஆற்காடு நகராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர் மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, காய்கார தெரு, கதவு எண்.54 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.சுரேஷ் என்பவரின் 20.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.02.2023 அன்று பெறப்பட்டு 056/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, காய்கார தெரு, கதவு எண்.54 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.சுரேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நாங்கள் அனைவரும் ஆற்காடு நகராட்சியில் Green Warrior, Chennai என்ற நிறுவனத்தினரின் கீழ் தனியார் (ஒப்பந்த) தூய்மை பணியாளர்களாக கடந்த 01.05.2014 முதல் 30.05.2018 வரையில் தூய்மை பணி செய்து வந்தோம். மேற்கண்ட நிறுவனத்தினர் 2014 முதல் 2018 வரையிலும் ஆற்காடு நகராட்சியில் பணிபுரியும் எந்த ஒரு பணியாளருக்கும் ESI, PF ஆகியவை கட்டாமல், 2016–ல் இருந்து 30.06.2018 வரையில் குறைத்து கட்டியதும், ஒரு சில பணியாளர்களுக்கு ஜுன் 2019 வரையில் PF, ESI குறைவாகவும் செலுத்தியுள்ளனர். மேலும் இருவருக்கு மட்டும் ஜுன் மாதம் 2019–ல் ஒரு நாள் மட்டும் வேலை செய்தாற்போல் PF, ESI கட்டியுள்ளனர். ஆனால் மேற்கண்ட இருவருமே எங்களுடன் 2014 ஆம் ஆண்டு முதல் பணி புரிந்து வருகின்றனர். இவர்கள் இது போல் முறைகேடாக போலியான PF பில்களை கொடுத்து ஆற்காடு நகராட்சி துப்புரவு ஆய்வாளர்களுடன் சேர்ந்து எங்களுக்கு துரோகம் செய்துள்ளனர். எனவே, எங்களுக்கு சேர வேண்டிய PF தொகை வரவில்லை மற்றும் அவசரத்தேவைக்கும், மருத்துவச் செலவுகளுக்கும் பணம் எடுக்க முடியவில்லை. இதனால் எங்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் Green Warrior, Chennai நிறுவனம் ஆற்காடு நகராட்சியில்

பணிபுரிந்த எங்கள் அனைவருக்கும் 2014 முதல் PF, ESI கட்டவும் அதேபோல் ஆற்காடு நகராட்சியில் மேற்கண்ட நிறுவனத்தின் பணி 30.04.2018 அன்றுவுடன் முடிவடைந்த நிலையில் மே 2018, ஜூன் 2018 ஆகிய இரண்டு மாதங்கள் கட்டியுள்ள PF, ESI கட்டியுள்ளவர்களுக்கும் மற்றும் ஆற்காடு நகராட்சியில் பணிபுரிந்த அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் Green Warrior, Chennai நிறுவனத்தில் பணிபுரிந்த 2014 முதல் 2018 வரையிலான அனைத்து பணியாளர்களுக்கும் மேற்கண்ட நான்கு வருடங்களுக்கான வருங்கால வைப்பு நிதி (PF) செலுத்த ஆணையிடுமாறும் மற்றும் போலியான PF பில் கொடுத்து ஆற்காடு நகராட்சியில் முறைகேடாக பணப்பட்டியல் பெற்ற Green Warrior நிறுவனம் மற்றும் ஆற்காடு நகராட்சியில் சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து எங்களுக்கு எதிராக செயல்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த சட்டப்படியான நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் இந்நிறுவனத்தார் பணியாளர்களை சப்ளை செய்த ஆவடி, அம்பத்தூர், பெருங்களத்தூர், திருவண்ணாமலை, வாலாஜாபேட்டை ஆகிய இடங்களிலும் வருங்கால வைப்பு நிதி மற்றும் சேமநல நிதி தொடர்பான முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர். அதனை அவர்களின் கோப்புகளை ஆய்வு செய்து இனி Green Warrior நிறுவனம் வேறு எங்கும் பணி செய்யாதவாறு கருப்புப் பட்டியலில் சேர்க்குமாறு கேட்டுகொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

ஆற்காடு நகராட்சி ஆணையாளர் தனது 15.03.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

- ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிகளுக்கு நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் குறைவாக உள்ளதினால் 31.12.2014 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரி திருவாளர்.கிரீன் வாரியர், திருவள்ளூர் என்பவரை 49 தூய்மைப் பணியாளர்களை 17.01.2015 முதல் 16.01.2016 வரை வெளிக் கொணர்வு முகமை (Outsourcing) மூலம் வழங்க உத்தரவிடப்பட்டது. மேலும், நிர்வாக நலன் கருதி இந்த ஒப்பந்த காலத்தினை 17.01.2016 முதல் 30.04.2018 வரை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்குட்பட்டு நீட்டிக்கப்பட்டது
- ஆற்காடு நகராட்சியின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.1185/2014/எச்1, நாள்.17.01.2014–ல் பிறப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் வ.எண்.07–ல் பணியாளர்களுக்கு தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகத்தில் (Employees State Insurance Corporation) பதிவு செய்து மருத்துவ வசதிகள் செய்து அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆற்காடு நகராட்சியின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.1185/2014/எச்1, நாள்.17.01.2014–ல் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் வ.எண்.08–ல் பணியாளர்களுக்கு வருங்கால சேமிப்பு அலுவலகத்தில் உரிய சேமிப்பு நிதி கணக்கில், மாதந்தோறும் சந்தாவினையும் உரிய காலத்தில் முறையாக ஒப்பந்ததாரரே தம் சொந்த பொறுப்பிலேயே வழங்க வேண்டும் என ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- ஆற்காடு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் வெளி முகவரான திருவாளர். கிரீன் வாரியர், திருவள்ளூர் என்பவர் 01.04.2015–ல் பணிபுரிந்த 49 தனியார் தூய்மைப் பணியாளர்களுக்கு தொழிலாளர் வைப்பு நிதி அலுவலகத்தில் உறுப்பினர் எண் பெறப்பட்டதில் புகார்தாரர் திரு.எஸ்.சுரேஷ் என்பவரின்

பெயர் இடம் பெறவில்லை. வருகைப் பதிவேட்டில் தனியாரின் பெயர் இல்லை. இதற்கான நகலினை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

- தனியார் முகமையில் 49 தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்ததில் மார்ச் 2015 முதல் ஏப்ரல் 2016 வரை, மே 2016 முதல் மே 2017 வரை மற்றும் ஜீன் 2017 முதல் ஏப்ரல் 2018 வரையிலான பணியாளர்களின் வருகைப் பதிவேடு தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
- திருவாளர். கிரீன் வாரியர், திருவள்ளூர் என்ற ஒப்பந்ததாரர் டிசம்பர் 2016, மே 2017, ஜூலை 2017, ஆகஸ்ட் 2017, செப்டம்பர் 2017 மற்றும் நவம்பர் 2017 ஆகிய மாதங்களில் தனியார் தூய்மைப் பணியாளருக்கு செலுத்தப்பட்ட தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீடுக்கான சலான்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
- தனியார் முகமையில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்குண்டான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீடு சந்தா தொகையினை முந்தைய மாதத்திற்குண்டானவைகளை செலுத்திய பின்தான் பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- புகார்தாரர் திரு.எஸ்.சுரேஷ் என்பவரின் மனுவில் பணியாளர்களுக்கு EPF and ESI போன்றவைகள் செலுத்தவில்லை எனவும், பெயர் குறிப்பிடாத இரண்டு நபர்களுக்கு ஜீன் 2019 மாதத்தில் பணிபுரிந்தார் போல் சந்தா தொகை செலுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு, ஆற்காடு நகராட்சியில் தனியார் முகமை மூலம் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கு மட்டுமே சந்தா தொகையினை ஒப்பந்ததாரர் திருவாளர். கிரீன் வாரியர், திருவள்ளூர் என்பவர் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் உள்ள தொகையினை பெறமுடியவில்லை என புகார்தாரரால் தெரிவிக்கப்பட்டதற்கு திருவாளர். கிரீன் வாரியர், திருவள்ளூர் என்ற ஒப்பந்ததாரர் மூலம் பணிபுரிந்த தூய்மைப் பணியாளர்களுக்கு செலுத்திய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் தொகைகளை எவரேனும் இந்நாள் வரை மேற்படி நிறுவனத்தின் மூலம் பெறாமல் உள்ளனர் என கண்டறிப்பட்டால் இந்நிறுவனம் மீது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் ஆற்காடு நகராட்சியின் மூலம் புகார் தெரிவிக்கப்படும். மேலும், இதில் முறைகேடு, நிலுவை இழப்பு ஏதும் இல்லை என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் ஆற்காடு நகராட்சி ஆணையரும் 16.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.S.சுரேஷ் 16.03.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"ஆற்காடு நகராட்சியில் கிரீன் வாரியர் என்ற நிறுவனத்தின் கீழ் ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்களாக 1.5.2014 முதல் பணியாற்றிவரும் மொத்தம் 49 பேர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு பிடித்தம் செய்யப்பட்ட ESI மற்றும் EPF தொகையை முறைப்படி கட்டவில்லை. மேலும், ஒரு சில பணியாளர்களுக்கு 2016 முதல் 2018 வரையில் குறைத்து கட்டியுள்ளனர். ஆற்காடு நகராட்சியினர் மேற்கண்ட ESI மற்றும் EPF தொகையை சரியாக கட்டாததால் எங்களது அவசரத் தேவைக்கு EPF தொகையிலிருந்து பணம் எடுக்க இயலவில்லை. இதனால் ஒப்பந்தத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

எனவே ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்களின் மேற்கண்ட ESI மற்றும் EPF தொகையை நகராட்சியினர் சரிவர கட்டியுள்ளனரா என்பது குறித்து விசாரித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 20.2.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையாளர் அலுவலகப் பணிகள் நிமித்தமாக காரணமாக 16.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை, அவருக்குப் பதிலாக சுகாதார அலுவலராக பணிபுரியும் திரு.மு.பாஸ்கர் என்பவரும் மற்றும் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.பி.ஜோப் ஆனந்தராஜ் என்பவரும் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.

''ஆற்காடு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 2014–2018 ஆம் ஆண்டுகள் வரை கிரீன் வாரியர் என்ற நிறுவனத்தின் மூலம் 49 ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, தூய்மைப் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீட்டுத் தொகையை, EPF மற்றும் ESI அலுவலகங்களில் மொத்தமாக கட்டப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் 2014 முதல் 2018 வரை கட்டப்பட்ட தொகைக்கான தனித் தனியான விவரங்களை இம்முறை மன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்க இயலவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், ஆற்காடு நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, ஆற்காடு நகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

7) இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காட்டைச் சேர்ந்த மனுதாரர் திரு.S.சுரேஷ் என்பவர் தனது 20.02.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆற்காடு நகராட்சியில் சென்னை, கிரீன் வாரியர் என்கிற நிறுவனம் மூலம் 01.05.2014 முதல் 30.05.2018 வரை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 49 தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி (ESI) தொகை மேற்காணும் நிறுவனத்தால் பணியாளர்களின் பெயர்களில் செலுத்தப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

- ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 49 ஒப்பந்தப் தூய்மைப் பணியாளர்கள் நியமனம் செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, சென்னை, கிரீன் வாரியர் (Green Warrior, Chennai) என்கிற நிறுவனம் மூலம் 01.05.2014 முதல் 30.05.2018 வரையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- ஆற்காடு நகராட்சி ஆணையாளரின் 17.01.2014 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் மேற்காணும் 49 ஒப்பந்தப் பணியாளர்களின் சேமநல நிதித் தொகையினை (EPF) வருங்கால சேமிப்பு அலுவலகத்திலும் மற்றும் ஈட்டுறுதித் தொகையினை (ESI) தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகத்திலும் ஒவ்வொரு மாதமும் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும் என்கிற நிபந்தனைகளுடன் கிரீன் வாரியர் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

8) மனுதாரரின் புகார் மனு குறித்து விசாரணை மேற்கொண்ட போது, 49 ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி தொகை ஆகியவை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் கிரீன் வாரியர் நிறுவனத்தால் மொத்தமாக செலுத்தப்பட்டுள்ளது என நகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தனர். ஆனால் மேற்படி 49 பணியாளர்களுக்கு மொத்தமாக தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி தொகை ஆகியவை செலுத்தியதற்கு எவ்வித ஆதாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஒவ்வொரு பணியாளருக்கும் ஊதியத்திலிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட விவரங்களும் சமர்ப்பிக்க இயலவில்லை என ஆற்காடு நகராட்சி சுகாதார அலுவலர் மற்றும் இளநிலை உதவியாளர் தெரிவித்துள்ளனர். இவர்களின் இப்பொறுப்பற்றச் செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

9) மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கு எதிராக ஆற்காடு நகராட்சி அலுவலர்களால் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படாததால், ஆற்காடு நகராட்சியில் 01.05.2014 முதல் 30.05.2018 வரையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் சென்னை, கிரீன் வாரியர் என்கிற ஒப்பந்த நிறுவனம் மூலம் நியமனம் செய்யப்பட்ட 49 ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்புத் தொகை (EPF) மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதி தொகை (ESI) ஆகியவை முறையே தொழிலாளர் வருங்கால வைப்பு அலுவலகத்திலும் மற்றும் மாநில தொழிலாளர் ஈட்டுறுதி கழகத்திலும் கிரீன் வாரியர் நிறுவனத்தால் 01.05.2014 முதல் 30.05.2018 வரையில் ஒவ்வொரு பணியாளர்தோறும் மற்றும் ஒவ்வொரு மாதமும் எவ்வித விடுதலின்றி செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்திடும் வகையில் சிறப்பு உள்ளாட்சி நிதித்தணிக்கை ஒன்றினை மேற்கொண்டு அதன் அறிக்கையினை 45 நாட்களுக்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் மற்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

10) உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையில் மேற்காணும் 49 பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் கிரீன் வாரியர் நிறுவனத்தால் செலுத்தப்படாமல் இருந்து அதற்கு அபராத வட்டி செலுத்தப்படவேண்டியிருப்பின் அந்த அபராத வட்டித்தொகை இதற்கு காரணமாக இருந்த பொறுப்பற்ற முறையில் செயல்பட்ட சம்பந்தப்பட்ட ஆற்காடு நகராட்சி அலுவலர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் பணியாளர்களிடம் பிடித்தம் செய்த வருங்கால வைப்பு தொகை மற்றும் ஈட்டுறுதித் தொகை ஆகியவை கிரீன் வாரியர் நிறுவனத்தால் செலுத்தப்படாமல் இருந்தால் கிரீன் வாரியர்,

சென்னை நிறுவனத்தை கருப்புப் பட்டியலில் (Black List) சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Municipal Commissioner, Arcot could not produce distinctive evidence to substantiate that the Green Warrior Agency (Outsourcing contract Company) had remitted the EPF & ESI subscription pertaining to the Arcot Municipality in time periodically as stipulated in the provisions as per the work orders executed by the Local Body with the outsourcing Agency. This gives rise to the suspicion that the allegations levelled by the petitioner are not vague, baseless and presumptions but valid, reasonable and probe-fit. Hence the DMA is directed to go the whole hog into the issue and unearth the facts in order to protect the interest of the employees working in the tie-up arrangements between the Municipality and the Agency.

This exercise should be completed within 30 days positively. The Commissioner, Arcot Municipality should have verified this remittance every month periodically so that this kind of allegation would not have been raised. It shows the indifference, slackness and lack of adequate and close supervision over administrative issue.

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.சுரேஷ்,
54, காய்கார தெரு, ஆற்காடு – 632 503,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2) ஆணையாளர், ஆற்காடு நகராட்சி,
ஆற்காடு – 632 503, இராணிப்பேட்டை மாவட்டம்.

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/3/23
செயலாளர்